தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
28.10.2024 (திங்கட்கிழமை)

## ஜிப்மர் மருத்துவமனை சார்பில்

# மனநல விழிப்புணர்வு மாரத்தான்

புதுச்சேரி, அக்.28–

ஆண்டுதோறும் அக்டோபர் 10–ம் தேதி உலக மனநல தினம் கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி புதுவை ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மனநலத்துறை சார்பில் மனநல விழிப்புணர்வு மாரத்தான் நேற்று நடைபெற்றது.

ஜிப்மர் மருத்துவக் கல்லூரியின் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். ஜிப்மர் விளையாட்டு மைதானத்தில் இருந்து தொடங்கிய மாரத்தான் முக்கிய சாலைகள் வழியாக புதுவை கடற்கரை மகாத்மா காந்தி சிலை அருகே வந்தடைந்தது. இதில் ஜிப்மர் டாக்டர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தினகரன்
அக்டோபர் 28, 2024 திங்கட்கிழமை

# ஜிப்மரில் 70 மருத்துவ பேராசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பம் வரவேற்பு

புதுச்சேரி, அக். 28: ஜிப்மர் புதுச்சேரி மற்றும் காரைக்கால் கிளையில் 70 மருத்துவ பேராசிரியர் பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி ஜிப்மரில் மருத்துவ பேராசிரியர்-26, உதவி பேராசிரியர்-35, காரைக்கால் ஜிப்மரில் மருத்துவ பேராசிரியர்-2, உதவி பேராசிரியர்-17 என 70 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளது. இப்பதவிகளுக்கு https://www.jipmer.edu.in என்ற ஜிப்மர் இணையதளத்தில் வருகிற நவ.21ம் தேதி மாலை 4.30 மணி வரை தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். இதில் பேராசிரியர் பதவிக்கு 58 வயதுக்கு மிகாமலும், உதவி பேராசிரியர் பதவிக்கு 50 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 5 ஆண்டுகளும், ஓபிசி பிரிவினருக்கு 5 ஆண்டுகளும் வயது வரம்பில் தளர்வு அளிக்கப்பட்டுள்ளது. இப்பதவிகளுக்கான கல்வி தகுதி, ஊதியம், பணி அனுபவம், இடஒதுக்கீடு விண்ணப்ப கட்டணம் உள்ளிட்ட விவரங்களுக்கு ஜிப்மர் இணையதளத்தை பார்க்கவும். இத்தகவலை ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.